அரசறிவியல்

தரம் - 12, 13

# முரண்பாடொன்று பயணிக்கும் பாதை

# முரண்பாட்டு வாழ்க்கைச்சக்கரம்




Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## தேர்ச்சிமட்டம் 6.3

### முரண்பாட்டு வாழ்க்கைச் சக்கரம்

முரண்பாட்டு கல்வியின் முன்னோடிகளின் ஒருவரான அமெரிக்க ஆய்வாளர் பேராசிரியர் லூவிஸ் கிறிஸ் பேர்க் (Luvis Krisberg) முரண்பாடுநிலையானது அல்ல “ஆரம்பித்து காணாமல் போவது”என்குறிப்பிட்டு முரண்பாட்டு பாதையை கண்டுபிடித்தார் அது முரண்பாட்டு வாழ்கைச்சக்கரம் என்ற கருத்திற்கு அடிப்படையாக அமைந்திருந்தது.






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 1 முரண்பாட்டுக்கான காரணம்/ நிபந்தனைகள்

- இது முரண்பாட்டின் ஆரம்ப நிலை
- முரண்பாட்டிற்கான காரணிகள் போதுமானதாயிருக்கும்
- காரணிகள் வெளித்தெரியா நிலை
- முரண்பாட்டுகாரணியாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலை
- இவ்விடத்திலேயே இனங்கண்டால் தீர்வை எட்டமுடியும்

## 2 முரண்பாடு ஏற்படல்(மேலெழல்) (Emergence)

- முதற்கட்டத்தில் காணப்பட்ட துன்பங்கள் அடிப்படையாகும்
- எதிர்மறை விளைவுகளை அடிப்படையாக கொண்டிருக்கும்
- சமப்படுத்த முடியாத அபிலாசையும் நோக்கமும் வளரும்

## 3 முரண்பாடு தீவிரமடைதல்(உக்கிரநிலை அடைதல்) Escalation

- முரண்பாட்டின் பரிமாணம், தீவிரத்தன்மை புதிய பண்புநிலை படிநிலைக்கு மாறும்
- வன்முறை கலந்த யுத்த படிநிலைக்குவரும்
- முரண்பாட்டு தரப்பினர் ஒரு தலைப்பட்சமாக யுத்த ரீதியான தீர்வில் ஆழமான அக்கறை செலுத்தலும் ஏற்படும்
- நாடுகளின் உள்ளக முரண்பாட்டில் இது நீண்டகால செயற்பாடாகும்
- அரசியல் தீர்வுக்கான வாய்ப்புக்குறைவு
- இராணுவ ரீதியான தீர்வே முனைப்பாகும்




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 4 அந்நியோன்யமான வகையில் காயப்படுத்தும் தேக்கநிலை (Mutually Hurting Stalemate)(William Zartman என்பவரால் முன்வைக்கப்பட்டது)

- முரண்பாடொன்று தீவிரத்தன்மை உயர்வடைவதில் இருந்து தீவிரத்தன்மை குறை-வடையும் வரை முரண்பாட்டின் பரிமாற்றத்தை தெளிவுபடுத்தும் கோட்பாட்டுச் சூத்திரமாகும்
- நீண்டகால முரண்பாட்டுநீடிப்பில் யுத்த ரீதியாக தீர்வினைப்பெற்றுக்கொள்வதற்கான திறன் இல்லாது என்பது தரப்புக்களுக்கு விளங்கும் நிலை
- எத்தரப்பும் ஒருதலைப்பட்ச வெற்றியை பெற்றுக்கொள்ள முடியாத நிலை
- முரண்பாட்டு தரப்புகளுக்கு வெறும் தீமையே தொடரும்
- பாரிய அளவில் நட்டங்களை எதிர் நோக்குதல்
- இந்நிலையில் இருதரப்பும் கலந்துரையாடல் முறையான தீர்வினைத்தேடும் நிலை
- முரண்பாட்டின் தீவிரத்தன்மையினைக் குறைப்பதற்கு அதிமுக்கிய கட்டம்
- **முரண்பாட்டை கலந்துரையாடல் மூலம் தீர்க்க மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர்களாக பங்கு கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்**

## 5 முரண்பாட்டுக்கான தீவிரநிலை அற்றுப்போதல் (De-Escalation)

- தீவிரத்தன்மையைக் குறைத்துக்கொள்ளும் சமிக்ஞையை இருதரப்பக்கும் இடையில் பரிமாறப்படும்
- இரு தரப்புக்களுக்கும் முரண்பாட்டினை தொடர்ந்து கொண்டு செல்வதற்கான வளம், திறன் பலவீனமடையும்
- சர்வதேச அழுத்தங்கள்
- மோதலை முன்னெடுப்பதற்கான மக்களின் ஒத்துழைப்பில் வீழ்ச்சித்தன்மை
- தரப்புக்கள் முரண்பாட்டினாலேயே களைப்படைதல்
- ஒருதலைப்பட்ச தீர்வுக்களை தேடும் திடசங்கற்பம் கீழ்நிலையடைதல்




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 6 முரண்பாட்டை முடிவுக்கு கொண்டுவருவதற்கான சமாதானப்பேச்சுவார்த்தை

- சிவில் யுத்த முரண்பாட்டினை முடிவுக்கு கொண்டுவர இரு தரப்பும் ஏற்றுக்கொள்ளும் கலந்துரையாடல்
- சமாதான உடன்படிக்கை நடைபெறும்
- மூன்றாம் தரப்பின் மத்தியஸ்த்தம் இடம்பெறும்

## 7 முரண்பாடு முடிவடைதல்

- நீண்டகால செயற்பாடு
- இரு தரப்பும் வெற்றிபெறும் மனோநிலை
- இருதரப்பும் இணக்கப்பாட்டுக்கு வருதல்
- இரு துருவ சக்திகளை இணைக்கும் ஏனைய சமூகசக்திகள் விளங்கிக்கொள்ளல்
- கிளர்சிசயாளர்களாயின் அவற்றின் அரசியல் கோரிக்கைகளை நிறைறே்றுவதா இல்லையா என்பதை தீர்மானிக்கும் நிலை அரசாங்கத்திடம்
- மிக தெளிவாக பயணிக்க வேண்டிய சந்தர்ப்பம்

## 8 முரண்பாட்டின் பின்னரான சமாதானத்தை கட்டியெழுப்புதல்

- கலந்துரையாடல்
- அந்நியோன்ய விட்டுக்கொடுப்பு (ஆரவரயட யுஉஉழஅஅழனயவழை)
- சமரச சமாதானம் ( ஊழஅிசழஅந) என்பன

இடம்பெறுவது முரண்பாட்டு வாழ்க்கைச்சக்கரத்தின் செயன்முயைறாகும்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி. பிரமாலட்சிமி ஜனேந்திரன் ஆிரியர் அரசறிவியல் (யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.இ.மத்தியூஸ் டியோனி ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (மு/ஒட்டுசுட்டான்.ம.வி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## முரண்பாட்டு தீர்வுக்கு தேவையான அணுகுமுறைகள்

சைமன் பிஸர் (Simon Fisher) ன் குழு 2000 ம் ஆண்டின் வெளியிட்ட முரண்பாட்டோடு பணிபுரிதல் செயற்பாடுகளுக்கான திறன்கள் மற்றும் உபாய முறைகள் (Working with Conflict: Skills and Strateries For Action) என்ற நூலில் முரண்பாட்டுத்தீர்வுக்கான அணுகுமுறைகளை குறிப்பிடுகின்றனர்

- சமூக உறவுகள் சார் அணுகுமுறை (Community Relations Approach)
- மனித தேவைகள் அணுகுமுறை (Human Needs Approach))
- அடையாளத் தேவைகள் அணுகுமுறை (Identity Needs Approach))
- கலாசாரத் தொடர்பாடல் அணுகுமுறை (cultural communication Approach)
- முரண்பாட்டு நிலைமாற்ற அணுகுமுறை (Conflict Tranformation Approach)
- பிரச்சினை தீர்த்தல் அணுகுமுறை (Prpblem solving Approach)

### 1 சமூக உறவுகள் சார் அணுகுமுறை (Community Relations Approach)

**இயல்பு**

01 நம்பிக்கையீனம்

02 விரோதம்

03 அந்நியமாதல்

**அணுகுமுறை**

01 தொடர்பாடலை விருத்தி செய்தல்

02 புரிந்துணர்வை விருத்தி செய்தல்




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அரசறிவியல்

## தரம் - 12, 13

2

### மனித தேவைகள் சார் அணுகுமுறை (Human Needs Approach)

**இயல்பு**

01 பாதுகாப்பு

02 அடையாளம்

03 ஏற்றுக்கொள்ளல்

04 குழுவின் கௌரவம்

05 அரசியல் பங்குபற்றல்

06 சுதந்திரம்

**அணுகுமுறை**

01 மானுட தேவைகளை அறியவைத்தல்

02 மாற்று வழி முறைக்கு தூண்டுதல்

03 அடிப்படை மனித தேவைகளை அடைய உதவியளித்தல்

3

### அடையாளத் தேவைகள் சார் அணுகுமுறை (Identity Needs Approach)

**இயல்பு**

1. சமூகக்குழுக்களின் அடையாளங்கள்
2. தோல்விகள்
3. துன்பங்கள்
4. பின்னடைவுகள்

**அணுகுமுறை**

1. தாம் ஒவ்வொருவருக்குமான அச்சுறுத்தல்களை கண்டுபிடித்து உதவுதல்
2. பயங்கள் என்னவென கண்டுபிடிக்க உதவுதல்
3. தன்னுணர்வாதல் (பச்சாத்தாபம்) (Empathy) அதுவாக மாறல்
4. சமரசத்தை கட்டியெழுப்ப உதவுதல்

தொகுப்பு :- திருமதி. பிரமாலட்சிமி ஜனேந்திரன் ஆசிரியர் அரசறிவியல் (யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.இ.மத்தியூஸ் டியோனி ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (மு/ஒட்டுசுட்டான்.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அரசறிவியல்

தரம் - 12, 13

4

**கலாசாரத் தொடர்பாடல் அணுகுமுறை (Identity Needs Approach)**

**இயல்பு**

1. கலாசார வேற்றுமை
2. கலாசார தெளிவின்மை

**அணுகுமுறை**

1. முரண்பாட்டுத்தரப்பின் கலாசாரப்புரிந்துணர்வை ஏற்படுத்தல்
2. குழுக்களின் நபர்களின் சாதக பாதக எதிர்மறை சிந்தனைகளை நீக்குதல்
3. உள்ளக கலாசார தொடர்பேற்படுத்தல்

5

**முரண்பாட்டு நிலைமாற்ற அணுகுமுறை (Conflict Transformation Approach)**

**இயல்பு**

- அசமத்துவம்
- பாராபட்சம்

**அணுகுமுறை**

- அசமத்துவம் பாரபட்ச காரணிகளை மாற்றுதல்
- புரிந்துணர்வை ஏற்படுத்தல்
- மக்களை வலுவூட்டல்
- சமாதானம், மன்னிப்பு, சமரசம்
- நியாயத்தன்மை

தொகுப்பு :- திருமதி. பிரமாலட்சிமி ஜனேந்திரன் ஆசிரியர் அரசறிவியல் (யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.இ.மத்தியூஸ் டியோனி ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (மு/ஒட்டுசுட்டான்.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

5

## பிரச்சினை தீர்த்தல் அணுகுமுறை (Problem solving Approach)

### இயல்பு

- வேறுபட்ட நோக்கம்
- பூச்சிய விருத்தி (Zero-sum)
- Win—Lost கொள்கை
- எதிரி அழிய வேண்டும்
- எதிரியின் படு தோல்வி

### அணுகுமுறை

- தீர்வுக்கான இணக்கப்பாடு
- நெகிழ்வுத்தன்மைக்கு இணங்க வைத்தல்
- win-win கொள்கையை எண்ணவைத்தல்
- வெற்றிக்கான இணக்கம்



## வினாக்கள்

1) முரண்பாட்டு வாழ்க்கைச்சக்கரத்தினை முரண்பாட்டு பாதையாக இனங்கண்ட அறிஞர் யார்?
2) காயப்படுத்தும் தேக்க நிலையை இனங்கண்ட அறிஞர் யார்?
3) முரண்பாட்டு அணுகு முறைகளை விளக்குக?
4) முரண்பாட்டு வாழ்க்கை சக்கரப்பண்புகளை(படிநிலைகளை) விளக்குக?

## விடைகள்

1) பேராசிரியர் லூயிஸ் கிறிஸ்பேர்க்
2) வில்லியம் A சார்ட்மன்

தொகுப்பு :- திருமதி. பிரமாலட்சிமி ஜனேந்திரன் ஆசிரியர் அரசறிவியல் (யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.இ.மத்தியூஸ் டியோனி ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (மு/ஒட்டுசுட்டான்.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk